பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
26 06 2025 **THURSDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பஹல்காம் தீவிரவாத தாக்குதலை, ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகள் பாரபட்சமின்றி கண்டிக்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.
- போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு அயராது பணியாற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்
- நாட்டின் கிழக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- வியட்நாமில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

<<<<<<>>>>>>>

அமைதி முயற்சிகளும், தீவிரவாத ஊக்குவிப்பும் ஒரே பாதையில் பயணிக்க முடியாது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சீனாவின் **Qingdao** நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலை, அனைத்து உறுப்பு நாடுகளும் பாரபட்சமின்றி கண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தீவிரவாதத்தை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள், தீவிரவாதிகளிடம் சிக்கியிருப்பது ஆபத்தானது என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, மதவாதம் மற்றும் தீவிரவாதத்தால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள உறுதியான நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்றும் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

மாநாட்டினிடையே, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் திரு. **Andrey Belousov** -வை திரு. ராஜ்நாத் சிங் சந்தித்து, இருதரப்பு ராணுவ ஒத்துழைப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

<<<<<<>>>>>>>

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், போதைப்பொருள் பழக்கம் இளைஞர்களை சீரழித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட இளைஞர்களை மீட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு அயராது பணியாற்றி வருவதாக திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை மாநகர காவல் ஆணையர் திரு. சங்கர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருவள்ளூர் மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சங்கர் 30 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

சுற்றுச்சூழல் மற்றும் வனஉயிரின பாதுகாப்பில் இந்தியா சர்வதேச அளவில் பங்காற்றி வருவதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

டேராடூனில் நடைபெற்ற வன உயிரின பாதுகாப்பு குறித்த மாநாட்டில் பேசிய அவர், 2014ஆம் ஆண்டில் நாட்டில் 47ஆக இருந்த புலிகள் சரணாலயங்களின் எண்ணிக்கை தற்போது 58ஆக அதிகரித்துள்ளது என்றார்.

வன உயிரின பாதுகாப்பு குறித்த பாரம்பரிய நடைமுறைகளை அறிவியல் முறையில் ஆவணப்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளையில், நாட்டின் இளையோர் வனஉயிரின பாதுகாப்பிற்கு நவீன தொழில்நுட்ப முறைகளை பின்பற்ற முன்வர வேண்டும் என்றும் திரு. புபேந்தர் யாதவ் கேட்டுக் கொண்டார்.

<<<<<<>>>>>>

மடகாஸ்கர் நாட்டின் சுதந்திர தினத்தை ஒட்டி, அந்நாட்டு மக்களுக்கு வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர்., மடகாஸ்கர் வெளியுறவு அமைச்சர் **Rasata Rafaravavitafika** -வுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்தியா – மடகாஸ்கர் இடையேயான நட்புறவு மஹாசாகர் தொலைநோக்கு கொள்கையின் அடிப்படையில் மேலும் வலுப்பெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

அவசர நிலை பிரகடனம், நாட்டின் ஜனநாயக வரலாற்றில் அழிக்க முடியாத கறையை ஏற்படுத்தியிருப்பதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. பண்டி சஞ்சய் குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முந்தைய காங்கிரஸ் அரசு மக்களின் குரலை ஒடுக்கியதுடன், உரிமைகளையும் பறிக்கும் செயலிலும் ஈடுபட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

ஆபரேஷன் சிந்து நடவடிக்கை மூலம் மேலும் 272 இந்தியர்கள் ஈரானில் இருந்து இன்று அதிகாலை புதுதில்லி அழைத்து வரப்பட்டனர்.

இதுவரை மொத்தம் 3 ஆயிரத்து 426 இந்தியர்கள் ஈரானில் இருந்து தாயகம் திரும்பியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசிய அவர், முந்தைய ஆட்சியில் பாதிக்கப்பட்ட மாநிலத்தின் வளர்ச்சியை தற்போதைய அரசு மீட்டெடுத்திருப்பதாக கூறினார்.

தமிழகம் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவதாக மத்திய அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்து மேற்கொள்ளப்படும் ஏற்றுமதியின் மூலம் வருவாய் அதிகரித்திருப்பதோடு, வேலைவாய்ப்பும் கிடைத்து வருவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

நாட்டின் கிழக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களிலும் இதே நிலை காணப்படும் என்று கூறியுள்ள அந்த மையம் ஜம்மு ஜஷ்மீர், லடாக் மற்றும் உத்ராகண்ட் மாநிலத்தின் ஒரு சில பகுதிகளிலும் இடியுடன் கூடிய பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஹிமாச்சலப் பிரதேசத்தில் கடந்த 24 மணிநேரத்தில் பெய்த கனமழை காரணமாக, 5 பேர் உயிரிழந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜம்மு காஷ்மீரிலும் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக **Pranoo** பகுதியில் **Doda - Bhaderwah** சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக தமிழகத்தின் ஒகேனக்கல் காவரியாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 45 செகண்ட்ஸ்)

காவிரியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதன் காரணமாக, மேட்டூர் அணை மீண்டும் நிரம்பும் நிலையில் உள்ளதால், டெல்டா பாசனத்திற்காக திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 47 செகண்ட்ஸ்)

**<<<<<<>>>>>>**

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியில், இந்தியா 5 தங்கம், 3 வெள்ளி மற்றும் 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**<<<<<<>>>>>>**

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Priya Konjengbam – Shruti Mishra** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-15, 21-17 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Cruz - Li** இணையை வென்றது.